இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 37 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 30 – புதன்கிழமை 16 செப்டம்பர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 85 - Issue 37 : Thiruvalluvar Year - 2057 - Aavani 30 - Wednesday 16 September 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## பெரியார் – அண்ணாவின் பிறந்த நாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்?

# காவல்துறை, காவி எஜமானர்களின் Controlக்கு சென்றுவிட்டதா?

## Reels முதலமைச்சரின் அடிமைத்தனத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, செப். 16 -**

**“தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்? காவல்துறை, காவி எஜமானர்களின் Control-க்கு சென்றுவிட்டதா?” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் Reels முதலமைச்சரின் அடிமைத்தனத்திற்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

**தந்தை பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு அவர் பிறந்த ஈரோட்டு மண்ணில் தி.க. சார்பில் செப்டம்பர் 17ஆம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணிக்கும், குடியாத்தத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தி.மு.கழகம் உள்ளிட்ட கட்சிகள் நடத்த விருந்த பேரணிக்கும், இந்த Circus அரசின் காவல்துறை அனுமதி மறுத்து இருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.**



**முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறை, வலதுசாரி அமைப்புகளின் பேரணிகளுக்கு அனுமதி வழங்கிவிட்டு, தமிழ்நாட்டை செதுக்கிய பெரியார் - அண்ணாவின் பிறந்த நாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்?**

**பெரியாரையும், அண்ணாவையும் கொள்கைத்தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் முதலமைச்சர், யாரை திருப்திப்படுத்த இதைச் செய்கிறார்?**

**காவல்துறை, முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? இல்லை அவரது காவி எஜமானர்களின் Controlக்கு சென்றுவிட்டதா?**

**பெரியார் - அண்ணாவை புறக்கணிக்கும் Reels முதலமைச்சர், அவருடைய அடிமைத்தனத்தையும் ஆணவத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, உடனே இந்த பேரணிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### பின்வாங்கிய காவல் துறை!

இதற்கிடையே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்த நிலையில் பேரணிக்கு காவல் துறை அனுமதி மறுத்தது என்பது தவறான செய்தி என்று பின்வாங்கி தற்போது அனுமதி அளிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், குடியாத்தத்திலும் அண்ணா பிறந்த நாள் பேரணிக்கு காவல்துறை அனுமதி வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

---

## கையாலாகாத, திறனற்ற ‘டம்மி’ முதல்வரின் ஆட்சியில்

# தமிழ்நாடு முழுவதும் வரலாறு காணா மின்வெட்டு!

## பொதுமக்கள் சாலை மறியல்! த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் முற்றுகை!

**சென்னை, செப். 16 -**

**“கையாலாகாத திறனற்ற டம்மி முதலமைச்சர் விஜயின் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் வரலாறு காணாத மின்வெட்டு ஏற்பட்டுள்ளதால் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டு த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை முற்றுகையிட்டனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு :-

மாநிலம் மற்றும் புறநகர் பகுதியில் முழுவதும் மின்தடை நீடிக்கிறது. தலைநகர் சென்னை அதிக இடங்களில் மின்வெட்டு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் அவதியடைந்து வருகிறார்கள்.

நெல்லை மாநகரில் இரவு 10 மணிக்கு மேல் 20 முதல் 30 நிமிடங்கள் வரை மின்தடை ஏற்படுகிறது.

### மதுரையில் 3 மணி நேரம்

மதுரை, விருதுநகர் மாவட்டங்களில் காலை,மதியம், இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. ஒரு சில இடங்களில் 2 முதல் 3 மணி நேரம் வரை மின்தடை செய்யப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்டத்திலும் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. ஈரோடு

மாவட்டத்தில் இரவு நேரங்களில் 3 மணி நேரம் வரை மின்தடை ஏற்படுவதால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

### வேலூர், திருப்பத்தூர்

வேலூர் நகரை பொறுத்த வரை தினமும் காலை, மாலை வேளையில் சுமார் 15 முதல் 20 நிமிடங்கள் மின்தடை உள்ளது.



மின் வெட்டை கண்டித்து கிருஷ்ணராயபும் த.வெ.க. பெண் எம்.எல்.ஏ. சத்யாவை பொதுமக்கள் முற்றுகையிட்ட காட்சி!

திருப்பத்தூர் மாவட்டத்தில் வாணியம்பாடி பகுதியில் 2 மணி நேரம் மின்தடை ஏற்படுகிறது. இதேபோல விஷமங் கலம் பகுதியில் காலை மற்றும் மாலை நேரங்களில் தலா 1 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகல் மற்றும் இரவு நேரங்களில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது.

### கடலூர்

கடலூர் வண்ணாரப்பாளையம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒரு மணி நேரமும், சிதம்பரம் பகுதியில் 2 மணி நேரமும் முன்அறிவிப்பும் இன்றி மின்தடை ஏற்படுகிறது. அதேபோல் விருத்தாசலம், சிதம்பரம், வடலூர், பண்ருட்டி, சேத்தியாத்தோப்பு மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள கிராம பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது. காலையில் 2 மணி நேரமும், இரவில் 2 மணி நேரமும் மின்வெட்டு ஏற்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகவே அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது.

### திண்டுக்கல், தேனி

திண்டுக்கல் மாவட்டத்தில் தினமும் குறைந்தபட்சம் 7 முறை மின்சாரம் துண்டிக்சுப்படுகிறது. தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, கடம லைக்குண்டு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தினமும் 3% மணி நேரம் மின் வெட்டு ஏற்படுகிறது.

திருச்சி மாநகரில் காலை நேரங்களில் சுமார் 30 நிமிடம் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. மாலை 4 மணிக்கு பின்னரும் அவ்வப்போது மின்தடை செய்யப்படுகிறது.

### எம்.எல்.ஏ. முற்றுகை!

அரியலூரில் கிராம பகுதிகளில்தான் பெரும்பாலும் மின் தடை உள்ளது. கரூர் மாவட்டத்தில் கிராம பகுதிகளில் பகல் மற்றும் இரவு நேரங்களில் மின்தடை உள்ளது.

தொடர் மின்வெட்டை கண்டித்து நேற்று முன்தினம் சேங்கல் கடைவீதி பகுதியில் அப்பகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் ஒன்று கூடி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த வழியாக கிருஷ்ணராயபுரம் த.வெ.க. எம்.எல்.ஏ. சத்யா காரில் வந்தார். அவரை முற்றுகையிட்டு பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

---

## தலைமைக் கழக அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களுக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதன் காரணமாக, நேற்று (15.09.2026) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவிருந்த “முப்பெரும் விழா” ஒத்திவைக்கப்படுகிறது. விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.